செ.வெ.எண்: 28 / ஆகஸ்ட் நாள் : 14.08.2017

## இராமநாதபுரம் மாவட்டம்

## உத்தரகாண்ட் மாநிலம், டேராடூனில் உள்ள ராஷ்ட்டிர இந்தியன் இராணுவ கல்லூரியில் 2018-ஆம் கல்வி ஆண்டிற்கு எட்டாம் வகுப்பு மாணவர் சேர்க்கைக்கான தகுதித் தேர்வுக்கான விண்ணப்பங்களை 30.09.2017க்குள் சமர்ப்பிக்க வேண்டும்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

உத்தரகாண்ட் மாநிலம், டேராடூனில் உள்ள ராஸ்ஷ்ட்ரிய இந்தியன் மிலிட்டரி காலேஜில் 8-ம் வகுப்பு மாணவர்கள் சேர்க்கைக்கு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் 01-12-2017 மற்றும் 02-12-2017 ஆகிய தேதிகளில் தகுதி தேர்வு நடைபெற உள்ளது. இத்தேர்வுக்கான விண்ணப்பங்களை 30.09.2017க்குள் The Controller of Examination, TNPSC, Chennai-3 என்ற முகவரிக்கு அனுப்பிட வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

டேராடூனில் உள்ள ராஸ்ஷ்ட்ரிய இந்தியன் மிலிட்டரி காலேஜில் 8-ம் வகுப்பிற்கு மாணவர்கள் சேர்க்கைக்கு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் 01-12-2017 மற்றும் 02-12-2017 ஆகிய தேதிகளில் தகுதி தேர்வு நடைபெற உள்ளது.

இத்தேர்விற்கு தகுதியாக 01.07.2018-இல் 7-ஆம் வகுப்பு படிக்க வேண்டும் அல்லது தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். விண்ணப்பம் செய்யும் மாணவர்களின் வயது வரம்பு 11 1/2 வயது முதல் 13 வயதிற்குள் இருத்தல் வேண்டும். அதாவது 02.07.2005-க்கு முன்னதாகவோ அல்லது 01.01.2007க்கு பின்னதாகவோ பிறந்தவராக இருத்தல் கூடாது.

ஆங்கிலம் பாடத்தில் 125 மதிப்பெண்களுக்கு 2 மணி நேரமும், கணிதம் பாடத்தில் 200 மதிப்பெண்களுக்கு 1.30 மணி நேரமும், பொது அறிவு பாடத்தில் 75 மதிப்பெண்களுக்கு 1 மணி நேரமும் தேர்வு நடைபெறும்.

மேற்கண்ட தகுதியுள்ளவர்கள் தேர்வுக்குரிய விண்ணப்பப் படிவத்தைப் பெற பொது மாணவர்கள் விரைவுத் தபாலில் பெற ரூ. 600/-, SC/ST மாணவர்கள் விரைவுத் தபாலில் பெற ரூ.555/-க்கு “THE COMMANDANT RIMC DEHREDUN”, என்ற பெயரில; DRAWEE BRANCH, STATE BANK OF INDIA TEL BHAVAN, DEHREDUN (BANK CODE – 01576), UTTARAKHAND என்ற வங்கியில் மாற்றத் தக்க வகையில் வங்கி வரைவோலைப் பெற்று (SC/ST மாணவர்கள் சாதிச் சான்றிதழை இணைத்து அனுப்பவும்) வெள்ளைத் தாளில் விண்ணப்பம் எழுதி அனுப்ப வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை The Controller of Examination, TNPSC, Chennai-3 என்ற முகவரிக்கு 30-09-2017-க்குள் அனுப்ப வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு www.rimc.org. என்ற இணைய தள முகவரியில் பார்க்கவும். அல்லது துணை இயக்குநர் முன்னாள் படைவீரர் நலம், இராமநாதபுரம் அவர்களை தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**